1981 ஏப்ரல் 7]

பெருநாழியில் சார் பதிவாளர் அலுவலகம் அமைக்கும் திட்டம்.

*வினா எண். 669—திரு. கே. தனுக்கோடித் தேவர்: மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம் பெருநாழியில் சப்-ரெஜிஸ்தரார் அலுவலகம் ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், நடப்பு ஆண்டில் துவக்க அரசு ஆணை பிறப்பிக்குமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: (அ) ஆம்.

(ஆ) அலுவலகம் அமைக்கத் தேவையான சாத்தியக் கூறுகள் இருப்பின் அடுத்த ஆண்டின் இரண்டாம் பகுதி திட்டத்தில் சேர்த்துக் கொள்வதுபற்றி அரசு பரிசீலிக்கும்.

அரசு விளம்பரங்களுக்கான செலவு

*வினா எண். 670—திரு. து. புருஷோத்தமன்: மாண்புமிகு செய்தி அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1978–1979, 1979–1980 ஆண்டுகளில் தினசரி பத்திரிகைகளில் தமிழக அரசு விளம்பரங்களுக்கென செலவளிக்கப்பட்ட தொகை எவ்வளவு?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: இக்கேள்விக்கான விடைகுறிப்பு ஒன்று* அவையில் வைக்கப்படுகிறது.

திரு து. புருஷோத்தமன்: இந்த விவர அறிக்கையில் எல்லா தமிழ்ப் பத்திரிகைகளுக்கும் அல்லது எல்லாப் பத்திரிகைகளுக்கும் கொடுக்கப்பட்ட, விளம்பரச் செலவு பற்றிய பணத்தைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்த விவர அறிக்கையைப் பார்க்கிறபோது ஆட்சியை ஆதரிக்கிற பத்திரிகைகள் அல்லது ஆளும் கட்சியை ஆதரிக்கும் பத்திரிகைகள் அதிகமான விளம்பரம் பெற்றிருக்கிறது என்பது தெளிவாகத் தெரிகிறது. குறிப்பாக 1978–79 ஆம் ஆண்டில் தினத்தந்திக்கு ஏறக்குறைய ஒன்பது இலட்சம் ரூபாய் அளவிற்கு விளம்பரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதே நேரத்தில் தினகரனுக்கு ரூ. 55,000-க்கு விளம்பரம் கொடுக்கப்

---

* 394-ம் பக்கத்தில் இணைப்பு I ஆக அச்சிடப்பெற்றுள்ளது.